

முதல்வரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஒன்றியம், மின்னூர் ஊராட்சியில் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் புதியதாக கட்டப்பட்ட குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சியில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ் தலைமையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. முன்னிலையில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழ்ர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளிடம் ஒப்படைத்தனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, மாதனூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.ச.சுரேஷ்குமார் மற்றும் அரசு துறை அதிகாரிகள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நகர மன்றத் தலைவர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

### தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால்

# நிதியை நிறுத்தி நிர்ப்பந்திப்பதா?

### ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஆக.31

தமிழ்நாடு தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க மறுத்ததால் நிதியை நிறுத்தி நிர்ப்பந்திப்பதா? என்று தீக்கதிர் தலையங்கத்தில் ஒன்றிய அரசுக்கு கேள்வி எழுப்பியுள்ளது.

இது குறித்த தலையங்கம் வருமாறு:-


தீக்கதிர்
2024 ஆகஸ்ட் 29 வியாழக்கிழமை
நிதியை நிறுத்தி நிர்ப்பந்திப்பதா?

தேசிய கல்விக்கொள்கையை ஏற்க மறுத்தால் கல்விக்கான நிதியை நிறுத்துவோம் என தமிழ கத்தை ஒன்றிய அரசு மறைமுகமாக நிர்ப் பந்திப்பது கடும் கண்டனத்திற்கு உரியது.

ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (சமர்க் கார சிக்ச அபியான்) கீழ் 2024-25 ஆம் ஆண்டிற்குத் தமிழகத்திற்கு வழங்க வேண்டிய முதல் கட்ட நிதி ரூ.573 கோடியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்தி ருக்கிறது. இத் திட்டத்தின் முதன்மை நோக்கமே அடிப்படைக் கல்வி தேவையை உறுதிப்படுத்துவதே ஆகும். அதற்கான திட்டத்தை ஒவ்வொரு ஆண்டும் மாநில அரசுகள் சமர்ப்பிக்கும் போது அதனை ஒன்றிய அரசின் ரைசிங் இந்தியா திட் டத்தின் கீழ் உள்ள திட்ட ஒப்புதல் வாரியம் ஒப்பு தல் அளிக்கும். அதன்படி 2024- 25 ஆம் ஆண்டிற்கு தமிழகத்திற்கு ரூ 3,586 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதில் ஒன்றிய அரசின் பங்களிப்பான ரூ. 2,152 கோடியில், முதல் தவணையாக ரூ. 573 கோடியை ஜூன் மாத்திலேயே விடுவித்திருக்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசு விடுவிக்கவில்லை. மாறாக பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்ட த்தில் சேர புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால் மட்டுமே நிதி ஒதுக்கப்படும் என நிர்ப்பந்திக்கப்படுகிறது. பி.எம்.ஸ்ரீ பள்ளிகள் திட்டத்தின் படி புதிய தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்தினால் உடனே விடுவிக்கப்படும் என முன்நிபந்தனை விதிப்பது எந்த வகையிலும் ஏற்புடையதல்ல. இதே போல் கடந்த 2023- 24 ஆம் நிதியாண்டிற்கான ரூ. 249 கோடியையும் இதுவரை விடுவிக்கவில்லை. இது ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத மற்றும் அப்பட்டமான எதேச்சதிகார நடவடிக்கையாகும்.

தேசியக் கல்விக் கொள்கை 2020 கால அட்ட வணைப்படி 2030க்குள் தற்போது உள்ள நிர்வாக மற்றும் கல்வியியல் கட்டமைப்பை முழுமையாக மாற்றியமைப்பதாகும். அதற்காக மாநில அரசு களை பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி; படிப்படியாகத் தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த அனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது. இதன் முதன்மை நோக்கம் மாநில அரசுகளால் சமூகநீதியின் அடிப்படையில் உருவான கல்விக் கட்டமைப் பைச் சிதைப்பதே ஆகும்.

இதன் ஆபத்துக்களை உணர்ந்தே இத்திட்டத் தில் தில்லி, பஞ்சாப், மேற்கு வங்கம், தமிழகம், கேரளா உள்ளிட்ட மாநிலங்கள் இதுவரை இணை யவில்லை. ஏற்கனவே தமிழகம் பிஎம் ஸ்ரீ திட்டத் தில் சேர மும்மொழிக் கொள்கையிலிருந்து விலக்கு உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்தது. அதைக் கூட ஒன்றிய அரசு ஏற்க மறுத்துவிட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி கல்வி பொதுப் பட்டியலில் இருக்கிறது. இதில் மாநில அரசுகளின் உரிமைகளும் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. ஆனால் ஒன்றிய அரசு மாநிலங்களின் உரிமையை அடியோடு பறித்து ஒட்டு மொத்த கல்வியையும் காவிமயமாக்கத் துடிக்கிறது. இதனை ஒரு போதும் தமிழகம் ஏற்காது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சென்னை கொளத்தூரைச் சேர்ந்த

# புற்று நோயாளியின் சிகிச்சைக்கு ரூ.3 லட்சம் பிரதமர் நிவாரண நிதி!

### வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. பரிந்துரையில் நடவடிக்கை!

புதுடெல்லி, ஆக. 31 -

சென்னை கொளத்தூரைச் சேர்ந்த ராமதாஸ் கோவிந்தராஜன். சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 3 லட்சம் வழங்கப்பட்டுள்ள தாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர், தி.மு.க சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளருமான வழக்கறிஞர் இரா.கிரிராஜன் விடுத்த கோரிக்கையை ஏற்று பிரதமர் அலுவலகம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.



சென்னை கொளத்தூரைச் சேர்ந்தவர் ராமதாஸ் கோவிந்தராஜன். இவர் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் சென்னை முகப்பேர் மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில் சிகிச்சை பெற நிதி உதவி இல்லாமல் இருந்தார். இது தொடர்பாக பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து, அவருக்கு உதவிடுமாறு பிரதமர் மோடிக்கு இரா. கிரிராஜன் எம்.பி. கடிதம் எழுதியிருந்தார்.

இந்த பரிந்துரையை ஏற்று பிரதமர் மோடி, ராமதாஸ் கோவிந்தராஜன் அவர்களின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு பிரதமர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 3 லட்சம் வழங்க உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பான கடிதங்களை மருத்துவமனைக்கும் நாடாளு மன்ற உறுப்பினர் இரா. கிரிராஜன் அவர்களுக்கும் பிரதமர் அலுவலகம் அனுப்பியுள்ளது.

சிகிச்சைக்கான தொகை ரூ. 3 லட்சத்தை நோயாளி சிகிச்சை பெறும் சென்னை, முகப்பேர், மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனைக்கு நேரடியாக வழங்கப்படும் என்றும், சிகிச்சை முடிந்த பின்னர், உரிய ஆவணங்களின் நகலை, பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் பிரதமர் அலுவலகக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஒலக்கூர் ஒன்றியத்தில்

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

### அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம்,ஆக.31-

விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் பட்டணம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்டம் முகாம் தொடங்கப்பட்டது.

ஒலக்கூர் ஒன்றிய பெருந் தலைவர் சொக்கலிங்கம் தலைமை தாங்கினார். துணை சேர்மன் ராஜாராமன் முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணகுமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடம் இருந்து வரப் பெற்ற கோரிக்கை மனுக்களை பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்காக அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து ஊரக வளர்ச்சி துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 22 பயனாளிகளுக்கு 77 லட்சத்தி 85 ஆயிரம்மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை அவர் வழங்கினார்

அப்போது நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

பொது மக்களுக்கு வேண்டிய அனைத்து சேவைகள் மற்றும் கோரிக்கைகள் விரைவாக நிறைவேற்றிட வேண்டும் என்ற வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஊரகப் பகுதிகளில் செயல்படுத்துவதற்கு உத்தரவிட்டு தொடங்கி வைத்துள்ளார்.

ஊரகப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 15 அரசுத்துறைகள் சார்ந்த 44 சேவைகள் மீது தீர்வு காணப்பட்டு இம் முகாம்கள் ஊராகப் பகுதியில் தொடங்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவித்த அமைச்சர் செஞ்சி மஸ்தான் பொதுமக்கள கொடுத்த கோரிக்கை மனுக்கள் மீது ஒரு மாதத்தில் தீர்வு காணப்படும் என அவர் தெரிவித்தார். மேலும் விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி விவசாயிகளுக்கு இலவச மின்இணைப்பு திட்டங்கள் என பல்வேறுதிட்டங்களை விவசாயிகளுக்கு செயல்படுத்திவிவசாயிகள் மீது ஒரு அக்கறை உள்ள முதலமைச்சராக திகழ்வதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் பெருமிதம் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் சிப்காட் தனித்துணி ஆட்சியர் விஜயா, திண்டிவனம் வட்டாட்சியர் சிவா , மாவட்ட கவுன்சிலர் மமனோசித்ரா ராஜேஸ்வரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் விஜய பாஸ்கர், சுப்புலட்சுமி, சிலம்பரசன், அண்ணாதுரை, ஊராட்சி மன்ற தலைவர்கள் அன்பு சேகர், அன்பழகன், சந்திரலேகா, அஞ்சலை, ஆறுமுகம், வசந்தி, சுதா காளி, மூர்த்தி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர், வட்டார வளர்ச்சி அலுவலர்சிலம்புச் செல்வன் நன்றி கூறினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயத்தை தி.மு.க. உறுப்பினர்களான ஷஃபீக் மற்றும் டேவிட் ஆகியோர் பஹ்ரைனுக்குக் கொண்டு சென்றனர். பல்லாயிரம் இந்தியர்கள் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் இந்தியன் கிளப்பில் அதனை பொதுமக்கள் பார்வைக்கு வைத்தனர். நினைவு நாணயத்தை ஏராளமானோர் கண்டு களித்தனர். இந்திய சங்க நிர்வாகிகள் – தலைவர் கேசியஸ் ப்ரேரா, பொருளாளர் பிஜோய், கேளிக்கைச் செயலாளர் நந்தகுமார், தி.மு.க. அயலக அணி செயல் வீரர்கள் ஷபீக், டேவிட் மற்றும் வித்யாதரன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.



விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் பட்டணம் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்டம் முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சிமஸ்தான் தொடங்கி வைத்து முகாமில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 22 பயனாளிகளுக்கு 77 லட்சத்தி 85ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய வீடுகள் கட்டுவதற்கான பணி ஆணைகளை அவர் வழங்கினார். உடன் ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன், வட்டாட்சியர் சிவா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிலம்புச் செல்வன், சரவணகுமார், ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை ஆகியோர் உள்ளனர்.

### மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வான

# 127 உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்!

சென்னை, ஆக.31

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்ட ரங்கில் மருத்துவ பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாக புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 127 உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார்.

அப்போது அவர் பேசியதாவது:-

மக்கள் நல்வாழ்வுத்துறையில் உணவு பாதுகாப்புத் துறை ஒரு அங்கமாக திகழ்ந்து வருகிறது. உணவு பாதுகாப்பு அலுவலர்களின் முக்கிய பணிகளான வணிக வளாகங்களில் ஆய்வு செய்தல், சான்றிதழ்கள் வழங்குதல், உணவு மாதிரிகளை எடுத்தல், ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் வழக்குகளை பதிவு செய்தல், தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை எடுத்தல், உணவு பாதுகாப்பு குறித்து விழிப்பு ணர்வுகளை ஏற்படுத்துதல் போன்ற பணிகளுக்காக உணவு பாதுகாப்பு அலுவலர்களின் பணியிடங்கள் என்பது இருக்கின்றது.

தமிழ்நாடு அளவில் உணவு பாதுகாப்பு அலுவலர்களின் ஒட்டு மொத்த பணியிடங்களின் எண்ணிக்கை 391, இதில் ஏற்கெனவே 235 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். உணவுப்பாதுகாப்பு அலுவலர்கள் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 127 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். தேர்வு செய்யப்பட்ட 127 பேருக்கும் கலந்தாய்வு நடத்தப்பட்டிருக்கிறது. கலந்தாய்வு மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது. எனவே இவர்களின் கடமைகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவர்களின் பணிகளான தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை கட்டுபடுத்துவது போன்ற ஏற்கெனவே செய்யப்பட்டு வரும் பணிகளை இன்னமும் தீவிரப்படுத்தி செய்திட வேண்டும் என்கின்ற அளவில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, இந்த துறையின் நடவடிக்கைகள் கடந்த 3 ஆண்டுகளாக செம்மையாக செய்யப்பட்டு வருகிறது. உபரி உணவு வீணாக்காமல் என்கின்ற திட்டமும், சற்றே குறைப்போம் என்கின்ற வகையில் எண்ணெய், உப்பு போன்றவற்றை குறைப்பது போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியும், ஒருமுறை உபயோகித்த எண்ணெய்யை மறுமுறை உபயோகப்படுத்தக்கூடாது என்கின்ற வகையிலான விழிப்புணர்வு, அத்தகைய எண்ணெய்யை மறுசுழற்சியின் மூலம் வேறு பொருட்களை தயாரிப்பது போன்ற பணிகளும், சூடான உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் பொட்டலமிட்டு தரக்கூடாது என்கின்ற விழிப்புணர்வு மற்றும் அதற்கு எதிரான நடவடிக்கைகள், உணவுப் பொருட்களின் பாக்கெட்டுகளில் இருக்கின்ற Lableகளில் சரியான தகவல்கள் இல்லாமல் இருப்பது அவ்வாறு இருந்தால் அவர்களின் மீது நடவடிக்கைகள் போன்றவை மிகச் சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது.

இப்படி பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் காரணத்தினால் இந்தியாவில் உள்ள 36 மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை பெற்று பல பரிசுகளை பெற்று வருகிறது. தமிழ்நாடு உணவு பாதுகாப்புத்துறையின் சார்பில் Eat Right Challenge போன்ற பல்வேறு போட்டிகளில் தமிழ்நாடு இந்தியாவில் மாவட்ட அளவிலான பரிசும், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களுக்கான பரிசுகளையும் தொடர்ந்து பெற்று வருகிறது. அந்தவகையில் இந்த துறைக்கு மேலும் பலம் சேர்த்திடும் வகையில் 127 உணவு பாதுகாப்பு அலுவலர்கள் இன்று பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

**மருத்துவத்துறையில் பணி நியமனங்கள்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மருத்துவப்பணியாளர்கள் மூலம் பணியிடங்கள் நிரப்பும் பணி வெளிப்படைத்தன்மையுடனும், தகுதியானவர்களுக்கு பணி நியமனம் என்கின்ற வகையில் பணி நியமனம் செய்யப்பட்டு ஆணை பெறுபவர்களுக்கு அவர்கள் விரும்பும் இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தி அந்தந்த இடங்களுக்கு ஆணை வழங்கும் பணி தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் 1947 உதவி மருத்துவர்கள், 1291 இதர மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், 977 தற்காலிக செவிலியர்களை நிரந்தர செவிலியர்களாக நியமனம் செய்திருப்பது, 946 மருந்தாளுநர் பணியிடங்களை நிரப்பியிருப்பது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலமாக இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்து தட்டச்சர்கள், சுகாதார அலுவலர்கள் என மொத்தம் 1583 பணியிடங்கள் என 6744 பணியிடங்கள் கலந்தாய்வு மூலம் வெளிப்படைத்தன்மையுடன் நிரப்பப்பட்டுள்ளது. இதோடு மட்டுமல்லாமல் 2553 மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


கிராம சுகாதார செவிலியர்களைப் பொறுத்தவரை 2250 பேர் நிரப்பிட நீதிமன்ற வழக்குகள் இருக்கும் காரணத்தினால் சற்று காலதாமதம் ஆகின்றது. சுகாதார அலுவலர்கள் 1066 பணியிடங்கள் நிரப்புவதற்கு ஏதுவாக 38 வழக்குகள் மதுரை உயர்நீதி மன்றங்களில் இருக்கும் காரணத்தினால் அப்பணிகள் வழங்குவதற்கு காலதாமதம் ஆகின்றது. ஆகவே இந்த பணியிடங்களை விரைந்து நியமிப்பதற்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேரூரையாற்றினார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. சுப்ரியா சாகு, உணவுப்பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் ஆர். லால்வேனா, மருத்துவப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் திருமதி.வி.கலையரசி, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை இயக்குநர் மற்றும் கூடுதல் ஆணையர் மரு.தேவபார்த்தசாரதி மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம்.அ. பொன்மொழி

### ஆகஸ்ட் 31 (2017)



பள்ளிப்பருவமாகிய 1965–ல் தான் பயின்ற பள்ளி மாணவர்களை ஒன்று திரட்டி, இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்.

ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட இளைஞர் அணி முதல் அமைப்பாளர், மாவட்ட மாநாட்டு தொண்டர் படைத் தலைவர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத் தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

பெரிய காஞ்சிபுரம் கூட்டுறவு வங்கி தலைவராகவும், கலைஞர் பட்டுக் கூட்டுறவு சங்க இயக்குநராகவும், திருவள்ளூர் பட்டுக் கூட்டுறவு சங்க தலைவராகவும் பொறுப்பேற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இவரின் நலப்பணிகள் என்றென்றும் மக்கள் மனதில் வீற்றிருக்கும். அவர் விட்டுச் சென்ற கழக பணிகள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு தொண்டரின் உள்ளத்திலும் குடியிருக்கும்” என தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**